# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

**Case No.** : O.S.No. 56/2020 **DW - 1** Cross continuation

**Name** : அன்பு **Husband's Name** : லேட். ரங்கன்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18.06.2025 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் – 03.50 PM**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. அரசாங்கத்தில் பட்டா கொடுத்ததாக சொல்லி நான் வழக்கு போட்டுள்ளதை நிரூபிக்கும் விதமாக அந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆண்டு எனக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு வழங்கப்பட்டது.

2. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ–6 30 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு வழங்கப்பட்டதா என்றால் இந்த ஆவணமா என்று தெரியாது ஆனால் 30 ஆண்டுகளுக்கு முன்பு சொத்து எனக்கு கொடுத்தார்கள். 30 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு பட்டா வழங்கியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. கடந்த 21.10.2009–ம் ஆண்டு வாதியின் தாத்தா, வா.த.சா.ஆ–1 அடிப்படையாக வைத்துதான் வழக்குசொத்தைப்பொறுத்து வாதி பெயருக்கு தானசெட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல, எங்கள் சொத்தின் சர்வே எண்ணையும் சேர்த்து எழுதிக்கொடுத்துவிட்டார்,

அப்பொழுது எங்களுக்கு தெரியாது, பின்னிட்டு எங்களுக்கு தெரியவந்தது, அதன்பின்னிட்டு கிருஷ்ணகிரி SP அலுவலகத்தில் புகார் கொடுத்தோம்.

4. பத்திரம் செய்த பிறகு எத்தனை ஆண்டுகள் கழித்து எங்களுக்கு தெரியவந்தது என்றால் 5 ஆண்டுகள் கழித்து எங்களுக்கு தெரியவந்தது. பி.வா.த.சா.ஆ–6, 7–ன் படி இந்த வழக்கிற்கு பின்னிட்டு கடந்த 23.08.2022–ல் தான் புகார் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான், எனக்கு விவரம் தெரிந்தபொழுது உடனடியாக புகார் கொடுக்க முடியவில்லை, அப்பொழுது எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது, அதன்பின்னிட்டு புகார் கொடுத்தேன்.

5. ச.எண்.217/1, 217/5 ஆகிய இரு சர்வே எண்களுக்கு இடையில் எந்த மனையில் என்னுடைய சொத்து அமைந்துள்ளது என்றால் 4, 5 நபர்களுக்கு சொத்து உள்ளது என்னுடைய மனை எண் மட்டும் நான் குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன். என்னுடைய மனை எண் என்னவென்றால் பட்டா எண். 17, ச.எண். 217/2 ஆகும்.

6. மனை எண் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல, நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு அந்த இடத்தில் மனை ஒதுக்கப்பட்டிருந்தால் மனையின் வரிசை எண்ணை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியும் என்றாலும் எனக்கு அந்த இடத்தில் மனை இல்லை என்பதால்தான் மனை எண்ணை குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல, அரசாங்கம் எனக்கு 4 1/4 செண்டிற்கு பட்டா கொடுத்துள்ளது.

7. 4 1/4 செண்டிற்கு பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மோசடியாக தயார்

செய்துள்ள பட்டாவில் (பி.வா.த.சா.ஆ–10) 2 செண்ட்தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு அவரது தாத்தா எழுதிக்கொடுத்த ஆவணம் செல்லாது என சொல்ல எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

8. நான் 20 வருடங்களுக்கு முன்பிருந்து கட்டிடம் கட்டி அனுபவத்தில் இருந்து வருவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, அதற்கான ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் கவுன்சிலராக இருந்த காலத்தில் அதிகாரத்தை பயன்படுத்தி மோசடியாக எனது பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனது கணவர் அப்படிப்பட்டவர் அல்ல.

9. நான் தாக்கல் செய்துள்ள எதிரிடை பாத்தியம் (Counter–Claim) தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் வாதிக்கு சாதகமாக செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**முடிவு நேரம் – 04.18 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- S. Munusamy, B.Sc., B.L.,

District Munsif(FAC),
Uthangarai.